11.03.2026

O.S.No. 42/2021

**PW1– ராமலெட்சுமி – த/பெ. குருசாமி**

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.03.2026

முதல் விசாரணை தொடர்ச்சி :

1. இரா.மாடப்பத்தேவர் ஐயம்பெருமாள் படையாச்சி என்பவரிடமிருந்து எழுதி வாங்கியுள்ள பதிவு பெற்ற கிரைய ஆவணம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதன் ஒளிநகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் ஆவணம் மிகவும் பழமையான ஆவணமாகவும், கிழிந்த நிலையில் உள்ளதாலும் இந்நீதிமன்றம் அதன் ஒளிநகலை குறியீடு செய்கிறது)

2. இரா.மாடப்பத்தேவரின் வாரிசுகளின் இடையே ஏற்பட்ட பாக உடன்படிக்கை ஆவணம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதன் ஒளிநகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 09.01.2020 தேதியிட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அமைந்துள்ள வழக்குரை தாவா சொத்திற்கான தூய நிலப்பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. வழக்குரை தாவா சொத்தின் புல எண்.731/20–க்குரிய பட்டா, சிட்டா இணைய வழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. புல எண்.731/20 க்கு இடைகால் சார்பதிவாளர்அலுவலகம் வழங்கியுள்ள வில்லங்கசான்றிதழ் இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வாதிகளின் வீடு அமைந்துள்ள புதிய புல எண்.731/11, 12,13,14,15,16 மற்றும் 17 க்குரிய பட்டா இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. வாதிகளின் குடும்ப கொடிவழி ஜாபிதா வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. வழக்குரை 3ம் அட்டவணை சொத்தில் நடந்துள்ள ஆக்கிரமிப்புகளை சுட்டிக்காட்டும் மாதிரி வரைபடம் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்களானது ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணம் கற்பனையானது. மேற்படி ஆட்சேபனை இறுதி விசாரணையின் போது முடிவு செய்யப்படும் )

9. 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரரும் 16.04.1986 தேதியிட்டு பெற்றுள்ள கிரைய ஆவண எண்.426/1986ன் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 20.11.2017 தேதியிட்ட மேற்படியார்களிடையே ஏற்படுத்திக்கொண்ட பாக உடன்படிக்கை ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 06.05.2019 தேதியிட்ட 1,2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதியின் துணையோடு ஏற்படுத்திக்கொண்ட சீர்திருத்த ஆவண எண்.1269/2019ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. புல எண்.731/46க்கான பட்டா கணினி வழி நகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. வழக்குரை தாவா 3 அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டுமானங்கள் மற்றும் வாசற்படியை காட்டும் புகைப்படங்கள் மற்றும் சிடி (எண்ணம்–7) வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வா.சா.ஆ.13 ஆவணமானது 65(பி) சர்டிப்பிக்கேட்டுடன் குறியீடு செய்யப்படுகிறது. )

14. 31.07.2020 தேதியில் நடைபெற்ற ஆய்க்குடி குறுவட்ட ஜமாபந்தியில் வாதிகள் ஆன்லைன் வாயிலாக அனுப்பியிருந்த மனு நகல் மற்றும் ஒப்புகை சீட்டு அசல் (எண்ணம்–2) வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15. 24.07.2019 தேதியில் சாம்பவர்வடகரை காவல்நிலையத்தில் 1ம் பிரதிவாதி அளித்த புகார் மனு விசாரணையின் வாதிகள் சார்பில் எழுத்துப்பூர்வமாக அளிக்கப்பட்ட பதிலுரை மனு கைநகல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16. 01.08.2019 தேதியன்று கடையநல்லூர் வட்டாட்சியரிடம் நேரில் அளித்த புகார் மனு கைநகல் வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17. 27.07.2020 தேதியிட்ட தென்காசி காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாதிகள் சார்பில் பதிவு அஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட புகார் மனு நகல் மற்றும் அதற்குரிய ஒப்புகை சீட்டு அசல் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18. 07.08.2020 தேதியில் சாம்பவர்வடகரை காவல்நிலையத்தார், வாதிகளுக்கு வழங்கிய புகார் மனு ஏற்பு ரசீது அசல் (எண்ணம்–2) வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

19. 16.10.2020 தேதியிட்ட கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் உபய கட்சிகளை மனு விசாரணைக்காக அழைக்க அனுப்பிய அறிவிப்பு அசல் வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

20. வழக்குரை தாவா 3வதுஅட்டவணைச் சொத்தில் பழைய புல எண்.203/2/66–ல் 2க்கு புதிய புல எண்.731/15க்கு உரிமையாளர்களை

குறிப்பிடும் பட்டா எண்.4303–ன் அசல் வா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai